**தமிழ்நாடு அரசு**
**பட்டு வளர்ச்சித்துறை**

**2020–2021 ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டு திட்டம்**

2020–2021 ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், **யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**, கிளை அலுவலகம்–2, பெரமனூர் மெயின் ரோடு, சேலம் மாவட்டம் மூலம் ஒப்பந்தம் மேற்கொண்டு (பாலிசி காலம் 29.11.2020 முதல் 28.11.2021 வரை) இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பட்டுப்புழு வளர்ப்பு தோல்வி, தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை சேதம், விபத்தினால் ஏற்படும் மருத்துவ செலவினம் மற்றும் விபத்தினால் உயிர் இழப்பு போன்ற காரணங்களுக்காக ஏற்படும் இழப்புக்கு ஏற்ப இழப்பீட்டு தொகை பட்டு விவசாயிகளுக்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் வழங்கப்படும்.

| **வ.எ** | **திட்ட கூறுகள்** | **வழங்கப்படும் அதிகப்பட்ச இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| 1 | அ) புழு வளர்ப்பு தோல்வி (100 முட்டைத் தொகுதிகளுக்கு மட்டும்) | ரூ.10,000 வரை |
| | ஆ) புழு வளர்ப்பு மனை சேதம் | ரூ.2,00,000 வரை |
| | இ) விபத்து காப்பீடு (3 நபர்களுக்கு) (விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பு) | ரூ.2,00,000 வரை |
| | ஈ) விபத்தினால் ஏற்படும் மருத்துவ செலவினம் (3 நபர்களுக்கு) | ரூ.1,00,000 வரை |

மேற்கண்டவற்றில் பட்டு விவசாயிகளுக்கு இழப்பீடு ஏற்படும் தருணங்களில் சம்மந்தப்பட்ட சார் சரக இளநிலை ஆய்வாளர் அல்லது தொழில்நுட்ப சேவை மைய அலுவலர் மூலம் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து, உடனுக்குடன் காலதாமதமின்றி உரிய ஆவணங்களை இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு சமர்ப்பித்து பட்டு விவசாயிகள் உரிய இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 0427 2313161, 7598790094, 7598790082

**இயக்குநர்**
**பட்டு வளர்ச்சித்துறை**
**சேலம்**

**இன்சூரன்ஸ் கம்பெனி அலுவலக முகவரி.**
**யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,**
**கிளை அலுவலகம்–2,**
**104/A பெரமனூர் மெயின் ரோடு,**
**ஸ்ரீ ரங்கா பில்டிங்க்ஸ் ( முதல் தளம்)**
**சேலம் – 636007,**
email. vvenkatesan@uiic.co.in